## தலைப்பு 249 – திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 யூலை 10 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தித்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 யூலை 18 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ)பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்கள் நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தினால் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமைால் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது.

(ஆ) திணைக்களத்தினால் முன்னைய ஆண்டிற்குரியதாக நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமைால் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.6.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| ஒதுக்கீட்டுக் கணக்கின் பிரகாரம் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணம் ‘பீ’ கணக்கின் ஆகக் கூடிய வரவு மீதகள் எல்லை ரூபா 26,000,000 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் ரூபா 10,000,000 எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்களில்லும் இணக்கக் கூற்றிலும் சரியான தகவல் உள்ளடக்கப்பட வேண்டும். | இதன்பிறகு இவ்வாறான நிலைமையொன்று ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுக்குமாறு குறித்த பிரிவுகளுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. |

#### 1.6.2 வைப்பு மீதிகள்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் கொடுக்கல் வாங்கல்கள் எதுவுமின்றி பேணிச்செல்லும் 07 வைப்புக் கணக்குகளில் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ரூபா 17,886,591 ஆக இருந்தது. | வைப்புக் கணக்கு மீதிகளை தீர்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ரூபா 4,150,000 ஆன வைப்பு மீதி 2019 ஆம் ஆண்டில் நோக்கத்திற்குட்பட்ட செயற்பாடுகளுக்காக ஈடுபடுத்துவதற்கு பாதுகாப்பு அமைச்சினால் திறைசேரியிடமிருந்து கட்டுநிதி விடுவிக்குமாறு |

| | | |
|---|---|---|
| | | வேண்டுகோள் விடப்பட்டிருந்ததுடன் ஏனைய 06 வைப்புக்கள் தொடர்பாக குறித்த அமைச்சிடமிருந்து மேலும் விசாரித்து தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. |

**1.6.3 கணக்காய்விற்காக சான்றுகளின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சுபிரி வாசனா லொத்தர் வருமானத்திலிருந்து 10 சதவீதம் தேசிய விளையாட்டுக்கள் நிதியத்திற்கு செலவு வைக்கப்படுவதுடன் 2013 யூலை முதல் 05 சதவீதம் வரை குறைக்கப்பட்டிருந்தது. அதற்குரிய அங்கீகாரம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அதற்குரிய அங்கீகாரம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். | இந்த விடயங்கள் நேரடியாக லொத்தர் சபையின் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கு உரித்தாக இருப்பதால் தேவையான தகவல்களை அந்நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொள்வது பொருத்தமென அவதானிக்கின்றேன். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 வருமான முகாமைத்துவம்**

| வருமானக் குறியீடு | ஆரம்ப மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான உள்ளபடியான வருமானம் | மிகை / (பற்றாக்குறை) ஆரம்ப மதிப்பீட்டிற்கான ஒப்பீடு | மிகை / (பற்றாக்குறை) ஆரம்ப மதிப்பீட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | % |
| 20.02.01.99 | 120 | 1,792 | 1,672 | 1393 |
| 20.02.02.01 | 4,300 | 6,213 | 1,913 | 44 |
| 20.02.02.99 | 1,300 | 1,928 | 628 | 48 |
| 20.03.01.00 | 117 | 162 | 45 | 38 |
| 20.03.02.99 | 11,500 | 8,643 | (2,857) | (25) |
| 20.03.03.02 | 2,100 | 1,582 | (518) | (25) |
| 20.03.05.00 | 1 | 582 | 581 | 58,100 |
| 20.03.99.00 | 15,000 | 37,456 | 22,456 | 150 |
| 99.00.20.05 | 2,000 | 3,261 | 1,261 | 63 |
| 20.06.04.00 | 16,800 | 25,584 | 8,784 | 52 |
| 30.01.01.00 | 10,000 | 12,486 | 2,485 | 24 |
| | 63,238 | 99,688 | 36,450 | 58 |

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | 02 செலவின விடயங்களுக்குரிய ஆரம்ப மதிப்பீட்டிற்கு ஒப்பாக 25 சதவீதமான பற்றாக்கறையொன்றும் 09 விடயங்களில் 24 சதவீதம் முதல் 58,100 சதவீதம் வரையான மிகை காணப்பட்ட போதும் வருமான மதிப்பீட்டை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | வருமான மதிப்பீட்டை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | திருத்திய வருமான மதிப்பீட்டை தயாரித்து ஒட்டுமொத்த வருமானம் மற்றும் பெறுவனவு முகாமைத்துவம் செய்யும் பொறுப்பு அரச நிதிக்கொள்கை திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2019 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் 2018 ஆம் ஆண்டிற்காக திருத்திய வருமான மதிப்பீட்டை உள்ளடக்கியிருக்கவில்லையென்பது அவதானிக்கப்பட்டது. |
| (ஆ) | **20.02.01.99 ஆம் இலக்க வருமான குறியீடு – ஏனைய வாடகை.**<br>திணைக்களத்தினால் 03 குத்தகை உடன்படிக்கைகளின் கீழ் சேகரிக்கப்பட்டிருந்த ரூபா 55,105,910 ஆன வருமானம் தொடர்பாக மேற்கொண்ட தெரிவுப் பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) | பூகொடை டெக்டைல்ஸ் கம்பனி மற்றும் ரமோனா தனியார் கம்பனிக்கு இடையே காணப்பட்ட வாடகை உடன்படிக்கை 2011 யூன் 01 ஆந் திகதி முதல் இதுவரை திருத்தங்களின்றி கடிதங்கள் மூலம் மாத்திரம் நீடிக்கப்பட்டு முன்னெகாண்டு வரப்பட்டிருந்தமை காரணமாக அரசிற்கு கிடைக்க வேண்டிய வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | முறைப்படி உடன்படிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். | தற்போது செல்லுபடியான உடன்படிக்கை 2019.05.31 ஆந் திகதியில் முடிவடையும் போது 2019.06.01 ஆந் திகதி ஆரம்பமாகும் புதிய குத்தகை உடன்படிக்கையொன்றை சட்டரீதியாக செல்லுடியாகும் வகையில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அத்திணைக்களத்தினால் அறிக்கையிடப்பட்டிருந்தது. |
| (ii) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மேற்படி வருமானக் குறியீட்டின் கீழ் நிலுவை வருமானம் ரூபா 17,928,725 ஆக இருந்தது. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்குரிய நடைமுறைகளை எடுக்குமாறு தொடர்ந்து அறிவூட்டுவதற்கும் பின்தொடர் நடவடிக்ரகை எடுப்பதற்கும் ஆலோசணைகளை திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ளன. |
| (இ) | **20.02.02.01 ஆம் இலக்க வருமானக் குறியீடு – வட்டி – கடன் வழங்குதல்**<br>2018 திசெம்பர் 31 திகதிக்கு உப | கடன் மற்றும் வட்டி | தொடர்புடைய நிறுவனத்திற்கு |

| | | | |
|---|---|---|---|
| | கடன் மீதி ரூபா 167,529,308 ஆனதுடன் அதற்கு தொடர்புடைய வட்டி அறவிடப்படுவதற்காக முறையான வழிமுறையொன்று பின்பற்றாமையினால் நிலுவை வருமானம் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில், 07 நிறுவனங்களுக்கு கொடுக்கப்பட்ட கடனுக்காக 2018 திசெம்பர் 31 திகதிக்கு அறவிடப்பட வேண்டிய வட்டி ரூபா 2,605,800,105 ஆக காணப்பட்டது. | அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | மற்றும் பொறுப்புக் கூற வேண்டிய மற்றைய தரப்பினர்களுக்கு இக் கடன் மீதிகள் தீர்க்கப்பட காலத்திற்கு காலம் அறிவிக்கப்பட்டதன் பின்னர் இக் கடன் மீதிகளை தீர்ப்பதற்கு தொடர்புடைய நிறுவனத்திற்கு முடியாதிருந்தது. |
| (ஈ) | **20.02.02.09 ஆம் இலக்க வருமானக் குறியீடு – வட்டி – வேறு**<br>---------------------------------------------- | | |
| (i) | 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் அரசாங்க நிதித் திணைக்களத்தால் அறவிடமுடியாதென கைவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த அரச உத்தியோகத்தர்களின் முற்பணக் கடன் வட்டி ரூபா 2,871,491 மில்லியனாக இருந்தது. | நிலுவை கடன்களை அறவிடுவது தொடர்பாக சரியான வழிகாட்டல்கள் வழங்கப்பட வேண்டும். | 10 ஆண்டுகளுக்கு சேவை காலமொன்றுள்ள நிரந்தர மற்றும் ஓய்வூதியத்துடன் கூடிய உத்தியோகத்தருக்குரிய வழங்கப்படும் அனர்த்தக் கடன்களுக்காக அவ்வாறான உத்தியோகத்தர்களுக்கு பிணையாளிகள் தேவையில்லை என்பதால் அவ்வாறான உத்தியோகத்தர்கள் வேலை இடைநிறுத்தம் செய்யப்படும் சந்தர்ப்பங்களில் அக்கடன் தொகை மற்றும் வட்டி என்பவற்றை அறவிடுவது தொடர்பாக பொது நிர்வாக மற்றும் அனர்தத் முகாமைத்துவ அமைச்ச செயலாளரின் ஆலோசணைகளைப் பெற்றக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |
| (ii) | 62 நிறுவனங்களுக்குரிய வருடக் கணக்காக இருந்து வரும் ஓய்வுபெற்ற, மரணித்த, வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்ட, சேவையை கைவிட்டுச் சென்ற, வேலையிலிருந்து இடைநிறுத்தி வைக்கப்பட்ட, உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 296,593,000 மில்லியன் கடன் மீதி அறவிட முடியாது காணப்பட்டது. | - மேற்படி - | 10 ஆண்டுகளுக்கு சேவை காலமொன்றுடன் நிரந்தர ஓய்வூதியத்துடன் கூடிய உத்தியோகத்தருக்குரிய வழங்கப்படும் அனர்த்தக் கடன்களை அறவிடுவதற்காக தாபன விதிக்கோவையில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. ஆதலால் இவ்வட்டி வருமானத்தை அறவிடுவதற்கு உரிய மாற்று வழிகள் தொடர்பாக பொது நிர்வாக மற்றும் அனர்தத் முகாமைத்துவ அமைச்ச செயலாளரின் ஆலோசணைகளைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| (உ) | **20.03.02.99 ஆம் இலக்க வருமானக் குறியீடு – விற்பனைகளும் கட்டணங்களும் - நிருவாக ரீதியான கட்டணங்களும் கொடுப்பனவுகளும் - நானாவிதம்** | | |
| (i) | 2015 யூலை 20 ஆந் திகதிய 01/2015 ஆம் இலக்க அரசாங்க நிதிக் கொள்கை சுற்றறிக்கையின் 04(ஆ) பந்தியின் பிரகாரம் அறவீடு செய்ய வேண்டிய நிலுவைப பணம் மேலும் கூட்டு சேர்வதை தவிர்ப்பதற்காக உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் கணக்கின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை மீதி ரூபா 1,086,843 ஆக இருந்தது. அதில் உள்ளடக்கப்பட்டுள்ள 2018 ஆம் ஆண்டிற்கு முன்னிருந்து வரும் ரூபா 971,471 ஆன மீதியொன்று 2018 ஆண்டில் ரூபா 13,297 தொகை அறவிடப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சுற்றறிக்கையின் பிரகாரம் நிலுவை தொகை மேலும் அதிகரிப்பதை தவிர்ப்பதற்கு துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென இத்திணைக் களத்திற்கு நடைமுறை ரீதியாக செயற்படுத்துவது சிக்கலான தொன்றாகும். அத்துடன் நிலுவை வருமானத்தை அறவிடுவதற்காக உரிய அமைச்சு மற்றும் திணைக்களம் செயற்பட வேண்டும். எவ்வாறாயினும் அரச நிதிக் கொள்கை சுற்றறிக்கை இலக்கம் 01/2015(IV) மூலமும் 2018.09.14 ஆந் திகதிய திறைசேரி சுற்றறிக்கை இலக்கம் 05/2018 இன் மூலமும் இது தொடர்பான பொறுப்பு குறிதத் நிறுவன தலைவருக்கு கையளிக்கப்பட்டது. |
| (ii) | மீளாய்வாண்டிடின் வருமானக் கணக்கிற்கு பெறுவனவு ரூபா 8,815 ஆக இருந்த போதிலும் மீள கொடுப்பனவு ரூபா 110.4 மில்லியன் மற்றும் தவறினை திருத்தி ரூபா 62.1 மில்லியனாக ரூபா 172.5 மில்லியன் திருப்பி கொடுப்பனவு செய்யப்பட்டது. இது தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களின் கண்காணிப்பு போதியளவு இல்லையென அவதானிக்கப்பட்டது. | தவறினை திருத்துதல் ரூபா திருப்பி கொடுப்பனவு என்பவற்றை குறைப்பது தொடர்பாக வருமான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் தெடார்ச்சியாக மேற்பார்வை செய்யப்பட வேண்டும். | திறைசேரி செயற்பாட்டு சுற்றறிக்கை இலக்கம் 05/2018 இன் 08 ஆம் பந்தி மூலம் தவறுகளை திருத்தம் செய்தல் மற்றம் மீள கொடுப்பனவு என்பவற்றைக் குறைப்பது தொடர்பாக உரிய வருமான சேகரிப்பு அமைச்சுக்கள்' திணைக்களம் மற்றும் நிறுவனத் தலைவர்களுக்கு ஆலோசணை வழங்கப்பட்டுள்ளது. |
| (ஊ) | **20.05.99.00 ஆம் இலக்க வருமானக் குறியீடு உள்ளமையை ஒப்படைத்தல் - தேசிய லொத்தர் சபையும் ஏனைய ஒப்படைப்புக்களும்** | | |
| (i) | மீளாய்வாண்டில் 07 லொத்தர்களிலிருந்து கிடைத்த ரூபா 3,770,722,361 தொகையான குறித்த லொத்தர்கள் தாபித்ததன் நோக்கம் நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை. | வருமானம் உரிய நோக்கங்களுக்கு ஈடுபடுத்த வேண்டும். | நிதியத்திற்கு பணத்தை வழங்குவதற்காக வருடாந்த மதிப்பீடுகளில் 249-01-01-1503-01 செலவின விடயத்தின் கீழ் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் உரிய நிறுவனங்களால் செயற்பாட்டுத் திட்டத்தின் பிரகாரம் |

| | | | |
|---|---|---|---|
| | | | தேவையான பணத்தை இத்திணைக்களத்திடமிருந்து கோரும் போது திறைசேரியால் தி தேவைப்பாடு மற்றும் மற்றம் திறைசேரியின் திரவத்தன்மை என்பன கருத்திற் கொள்ளப்பட்டு இப்பணத்தை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) | தேசிய சம்பத லொத்தர் வருமானத்திலிருந்து சுகாதார அபிவிருத்திக்கு 1998 ஆம் ஆண்டில் 10 சதவீதமான லொத்தர் பங்களிப்பு 2007 ஆம் ஆண்டின போது 15 சதவீதமாக இருந்தது. லொத்தாரின் விலையை ரூபா 10 இலிருந்து ரூபா 20 வரை உயர்ந்த நிலை வரை அல்லது விற்பனை முன்னேற்றமடைந்ததன் பின்னர் ஒரு ஆண்டு வரை பேணுவதன் கீழ் 2007 ஆம் ஆண்டு வரை விற்பனையில் 15 சதவீதம் ஆன லொத்தரின் பங்களிப்பு 2008 ஆம் ஆண்டிலிருந்து 10 சதவீதம் வரை குறைக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2008 ஆம் ஆண்டிலிருந்து லொத்தரின் விலை ரூபா 10 இலிருந்து ரூபா 20 வரை உயர்வடைந்திருந்ததுடன் 2012 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் லொத்தர் விற்பனை வருமானமும் அதிகரித்திருந்தும் ஜாதிக சம்பத லொத்தரின் சுகாதார அபிவிருத்தி நிதியத்திற்கான பங்களிப்பு 10 சதவீதம் பெறுமதியில் மாற்றமின்றிக் காணப்பட்டது. இதன் காரணமாக 2012 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆண்டு வரை சுகாதார சேவை அபிவிருத்தி நிதியத்திற்கு இழக்கப்பட்ட ரூபா 204,106,804 மில்லியனாக இருந்தது. | வருமான குறியீட்டு கண்காணிப்பு முறைப்படுத்தப்பட வேண்டும். | உரிய நிறுவகதினால் எதிர்பார்க்கப்பட்ட செயற்பாட்டுத் திட்டத்தின் பிரகாரம் பிரகாரம் தேவையான பணத்தை இத்திணைக்களத்திடமிருந்து கோரும் போது திறைசேரியால் நிதி தேவைப்பாடு மற்றும் திறைசேரியின் திரவத்தன்மை என்பன கருத்திற் கொள்ளப்பட்டு இப்பணத்தை விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | ரனவிரு சேவா அதிகார சபைக்கு ஆரம்பத்தில் ''ஜயவிரு'' லொத்தர் வருமானத்தில் 30 சதவீத பங்களிப்பை வழங்கியிருந்த போதும், 2011 ஆம் ஆண்டின் போது லொத்தரின் பெயர் மாற்றப்பட்டு அதற்காக ''சுபிரி வாசனா சம்பத'' மாற்றப்பட்டிருந்ததுடன் 2011 திசெம்பர் மாதத்திலிருந்து அப் பங்களிப்பு 10 சதவீதம் வரை குறைக்கப்பட்டிருந்தது. எனினும், | வருமான குறியீட்டு கண்காணிப்பு முறைப்படுத்தப்பட வேண்டும். | தற்போது காணப்படும் நிலைமையில் வழங்கக்கூடிய பங்களிப்பு 10 சதவதமாக இருப்பதால் சதவீதத்தை அதிகரித்தால் லொத்தர் விற்பனையை கொண்டு செல்ல முடியாமல் போகும் என் தேசிய லொத்தர் சபையால் தெரிவிக்கப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| | அது சம்பந்தமாக பெற்றுக்கொள்ளப்பட்ட அங்கீகாரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க ரணவிரு சேவா அதிகார சபையினால் 2011 திசெம்பர் மாதத்திலிருந்து 2018 திசெம்பர் மாதம் வரை இழக்கப்பட்ட வருமானம ரூபா 1,123,436,948 ஆக இருந்ததுடன் அந்த நிலுவையான பங்களிப்பு சம்பந்தமாக திணைக்களத்தால் இதுவரை நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (எ) | **20.06.04.00 ஆம் இலக்க வருமானக்குறியீடு – கடனை மீள அறவீடு செய்தல்**<br>--------------------------------------- | | |
| (i) | வருமான குறியீட்டிற்குரிய வருமான கணக்கீட்டு உத்தியோகத்தரால் 2017 யூலை மாதம் முதல் ரூபா 16,120 மில்லினான ஆரம்ப மதிப்பீடு மற்றும் 2018 யூலை மாதத்தின் போது ரூபா 23,604 மிலலியனாக திருத்த மதிப்பீடொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் அப்பெறுமதியில் ரூபா 16,800 ஆன வருடாந்த மதிப்பீட்டு பெறுமதிகளில் வேறுபட்டிருந்ததுடன் அதற்கான காரணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | வருமான குறியீடு கண்காணிப்பு முறைப்படுத்தப்பட வேண்டும். | கணக்காய்வு ஐய வினாவில் அப்பெறுமதி மதிப்பிடப்பட்ட பெறுமதியுடன வேறுபடவதாக குறிப்பிடப்பட்டிருந்த போதும் ஐயவினாவில் குறிப்பிடப்பட்ட அப்பறுமதி தொடர்பான விபரங்கள் குறிப்பிடப்பட்டிருக்க வில்லை. |
| (ii) | கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2018 சனவரி 01 வரை உப கடன்களாக ரூபா 181,246,818,277 வழங்கப்பட்டிருந்ததுடன் ஆண்டின் போதான அறீடுகள் ரூபா 25,583,642,347 ஆக இருந்தது. ஆண்டில் மேலும் ரூபா 11,866,343,377 உப கடன்களாக வழங்கப்பட்டிருந்ததுடன் ஏனைய சீராக்கங்களாக (அன்னியச் செலாவணி விகித வேறுபாடு) உடன் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ரூபா 167,529,519,308 ஆக இருந்தது. நிறுவகத்திற்கு வழங்கப்பட்ட தொகையில் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவடப்பட முடியாத கடன் மீதிகள் கீழே காட்டப்பட்டுள்ளன. | | |

| | | | |
|---|---|---|---|
| (i) | இலங்கை இறப்பர் உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக் கூட்டுத்தாபனத்திற்கு 1999 மற்றும் 2000 ஆண்டுகளில் வழங்கப்பட்ட முறையே ரூபா 550,990,000 மற்றும் ரூபா 222,350,000 ஆன கடன் மீதி | நிலுவை கடன்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இலங்கை இறப்பர் உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக் கூட்டுத்தாபனத்திற்குரிய கடன் தொகை நிதி அமைச்சின் பரிந்துரையின் பேரில் பதிவழிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |
| (ii) | இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்திற்கு 03 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்ட ரூபா 116,000,000 தொகையான உப கடன் | - மேற்படி - | இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனம் - இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபனத்தை மீளமைப்பதற்கு திட்டங்களுடன் கடன் தொகைக்காக திட்டமும் திறைசேரிக்கு வழங்குவதற்கு நிறுவகம் இணங்கியது. |
| (iii) | தேசிய கால்நடை வளங்கள் அபிவிருத்தி சபைக்கு 06 உடன்படிக்கைகளுக்குரிய வழங்கப்பட்டிருந்த உப கடன் தொகையில் அறவிடப்பட வேண்டிய மீதி ரூபா 2,577,284,323 ஆக இருந்தது. இக்கடனை அறவிடுவது தொடர்பாக 2017 ஒக்தோபர் 03 ஆந் திகதி திறைசேரி பிரதிச் செயலாளரின் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தின் போது குறைந்தது மாதமொன்றிற்கு ரூபா 10 மில்லியன் வீதம் செலுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்க அறிவிக்கப்பட்டதாக நிலுவை வருமான அறிக்கையில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் போதும் அது தொடர்பாக எதுவித செயல்முன்னேற்றமும் அறிக்கை இடப்பட்டிருக்கவில்லை | நிலுவை கடன்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தேசிய கால்நடை வளங்கள் அபிவிருத்தி சபை – நிறுவகத்தின் நிதி நிலைமையின் பிரகாரம் கடன்மீள நிரப்பும் இயலுமை இல்லாமை கருதி திறைசேரிக்கு செலுத்த வேண்டிய கடன்பணத்தை பங்குப் பணமாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் |
| | மில்கோ நிறுவனத்தின் தொழிற்சாலையைத் திருத்தம் செய்வதற்காக (I ஆம் பகுதி) கட்டம் I மற்றும் 2 இன் கீழ் வழங்கப்பட்ட உப கடன்களில் 2017 ஆம் ஆண்டின் இறுதி வரை ரூபா 4,501,780,602 நிலுவையாகக் காணப்பட்டது. | - மேற்படி - | மில்கோ நிறுவனத்தின் கடன்தொகையில் ஒரு பகுதியை அந்நிறுவனத்தை விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கும் பணத்தில் இருந்து தீர்ப்பதற்கும் எஞ்சிய தொகையை மீளமைப்பதற்கும் கொடுப்பனவு ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் |
| | சனச சங்கத்திற்கு குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு வழங்குவதற்காக 1992 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 11,114,479 தொகையில் எதுவித பணமும் மீளாய்வாண்டின் போது அறவிடப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | சனச சங்கம் மற்றும் சர்வோதய சிக்கன முயற்சிகள் அபிவிருத்தி (கரண்டீ) லிமிடட்இற்கு வழங்கப்பட்ட உப கடனை அறவிடுவதற்கு சட்ட அலுவல்கள் திணைக்களத்துடன் கலந்துரையாடியதன் பின்னர் |

| | | |
|---|---|---|
| அவ்வாறே கோவைகளின் பிரகார் இக்கடன் மீதி ரூபா 11,114,479 ஆக இருந்த போதும் குறித்த அட்டவணையில் ரூபா 12,056,479 என காண்பிக்கப்பட்ட காரணத்தினால் அதற்கு இடையே வேறுபாடு ரூபா 942,000 ஆக இருந்தது. | | சட்டமா அதிபர் மூலம் உரித்துக்கொரல் கடிதமொன்று (Letter of Demand) அனுப்புவதற்காக தேவையான ஆவணங்களை சட்ட அலுவல்கள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| வரையறுக்கப்பட்ட சர்வோதய பொருளாதார தொழில் முயற்சிகள் அபிவிருத்திச் சேவை (உத்தரவாத) செயற்திட்டத்திற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 1,333,994,396 கடன் பணத்தில் 2018 மார்ச் 31 ஆந் திகதி அளவில் முழுத்தொகையையும் கொடுப்பனவு செய்து தீர்வு செய்யப்பட வேண்டிய போதிலும் அதில் ரூபா 633,395,760 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை கடன்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதில் அளிக்கப்பட்டிருக்கவில்லை |
| • வரையறுக்கப்பட்ட தேசிய கடதாசிக் கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 50,000,000 வட்டியின்றிய கடன் பணத்தில் எப் பணமும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | தற்போது செயற்பாட்டில் இல்லாத வரையறுக்கப்பட்ட தேசிய கடதாசிக் கம்பனி மற்றம் இலங்கை மட்பாண்டக் கூட்டுத்தாபனம் என்பன அக்கடன்களை பதிவழிக்குமாறு அறிவித்துள்ளதுடன் உரிய அமைச்சின் பரிந்துரையுடன் அக்கடனைப் பதிவழிப்பதற்காக அமைச்சரவை விஞ்ஞாபனமொன்றை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| • இலங்கை மட்பாண்டக் கூட்டுத்தாபனத்திற்கு 2007 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டிருந்த ரூபா 9,400,000 வட்டியில்லாத கடன் பணத்தில் வரையும் ரூபா 8,676,923 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. | - மேற்படி - | |
| • ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து 1993 ஆம் ஆண்டின் போது பெற்றுக் கொள்ளப்பட்ட ரூபா 276,749,960 ஆன கடன் பணத்தை மாநகர சபை மற்றும் நகர சபை செயற்திட்டத்திற்கு உப கடனாக வழங்குவதற்கு நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு வழங்கப் பட்டிருந்ததுடன் 2019 மே 24 ஆந் திகதி வரை அதில் ரூபா 179,746,403 அறவிடப்பட வேண்டியிருந்தது | - மேற்படி - | நகர அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து அறவிடப்பட வேண்டிய பணம் தொடர்பாக 2019.05.24 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தின் போது நிலுவைக் கடனை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பது தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. |
| • கோல்டன் கீ வைப்பாளர்களுக்கு கொடுப்பனவு செய்வதற்காக தேசிய | - மேற்படி - | 2019.01.16 ஆந் திகதிய பொது முயற்சிகள் திணைக்கள |

| | | | |
|---|---|---|---|
| | கொள்கை மற்றும் பொருளாதார விவகார அமைச்சிற்கு 2015, 2016 மற்றுமஂ 2017 ஆம் ஆண்டுகளின் போது வழங்கப்பட்ட ரூபா 7,489.9 மில்லியன் உப கடனுக்காக உடன்படிக்கை மேற்கொள்ளவோ அல்லது உப கடனாக கணக்கீடு செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | பணிப்பாளரின் கடிதத்தில் உப கடன் உடன்படிக்கைக்கு வருவது நிராகரிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது. ஆதலால் உப கடனாக இத்தொகையை கணக்கீடு செய்ய முடியாதுள்ளது. |
| (iii) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உப கடன்களுக்கரிய மீதி உறுதிப்படுத்தல்கள் திறைசேரி ஏடுகளில் குறிப்பிடப்பட்ட பெறுமதிகளை ஒப்பீடு செய்யும் போது 03 உப கடன் உடன்படிக்கைகளுக்குரிய திறைசேரி பதிவேடுகள் மற்றும் மீதி உறுதிப்படுத்தல்களுக்கு இடையே ரூபா 54,516,590 ஆன சாதகமான மீதியொன்றும் உப கடன் உடன்படிக்கைக்குரிய ரூபா 363,310 ஆன சாதகமான மீதியொன்றும் அவதானிக்கப்பட்டன. | - மேற்படி - | திறைசேரி பதிவேடுகள் மற்றும் மீதி உறுதிப்படுத்தல்களுக்கு இடையே சாதகமான மீதிகளாக கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்கு களுக்குரிய வேறுபாடுகளுக்கு இடையே 2019 ஆம் ஆண்டின் பெறுவனவு ஒன்று 2018 ஆம் ஆண்டின் கணக்கில் கணக்கிடப்பட்டமை மற்றும் ஏனைய வேறுபாடுகளை சீராக்குவதற்காக நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஏ) | **30.01.01.00 ஆம் இலக்க வருமான குறியீடு – வெளிநாட்டு மானியங்கள்** | | |
| (i) | வெளிநாட்டு உதவிகள் சம்பந்தமான அனைத்து கொடுக்கல் வாங்கல்களும் பொதுத் திறைசேரியின் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தால் செய்யப்பட வேண்டும் எவ்வாறாயினும் திணைக்களத்தின் அறிவூட்டல் ஒன்று இல்லாமல் 03 நிறுவனங்களால் மீளாய்வாண்டில் ரூபா 114,879,740 ஆன வெளிநாட்டு உதவிகள் நேரடியாக உரிய நிறுவனங்களுக்கு பெற்றுக்கொள்ளபப்பட்டிருந்ததுடன் இம்மானியங்கள் தொடர்பான தகவல்கள் திணைக்களத்தின் அறிக்கையில் உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை. | 1994 ஏப்ரல் 20 ஆந் திகதிய 30/94 ஆம் இலக்க வெளிநாட்டு உதவிகள் கணக்கு வைப்பதற்குரிய அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் வெளிநாட்டு உதவிகள் பெற்றுக் கொள்ளல் மற்றம் கணக்கீடு செய்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். | அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கை இல. 30/94 திருத்திய 2.0 ஆம் பந்தியின் பிரகாரம் மற்றம் நிதிப்பிரமாணத்தின் XI ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளை கருத்திற்கொள்ளாமல் நேரடியாக நேரடியாக வெளிநாட்டு மானியங்களைப் பெற்றுக்கொள்ளும் அரச நிறுவனங்களுக்கு ஆலோசணைகளை வழங்குமாறு வெளிநாட்டு மானியம் உட்பட வெளிநாட்டு உதவி தொடர்பாக கொடுக்கல் வாங்கல் செய்யும் பொறுப்பு கையளிக்கப்பட்டுள்ள வெளிநாட்டு வள திணைகக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு தற்போது அறிவித்திருந்தார். |
| (ii) | 2018 ஆம் ஆண்டில் வெவ்வேறு அமைச்சுக்கள் மற்றும் திணைக்களத்திற்கு வெளிநாட்டு மானியங்களாக கிடைக்கும் | வெளிநாட்டு மானியங்கள் பயன்பாடு முறைப்படுத்த வேண்டும். | பிரகாரம் இலங வெளிநாட்டு மானியங்களாக கிடைக்கும் பணத்தை ஆரம்பத்தில் விசேட வைப்புக் கணக்கொன்றில் வைக்கப்பட்டு |

| | | | |
|---|---|---|---|
| | பணத்திலிருந்து குறித்த செயற்பாடுகள் நிறைவேற்று வதற்காக ரூபா 4,097,369,970 பாதீட்டு நிதி ஏற்பாடாக வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் உரிய செயற்பாடுகளுக்காக ரூபா 2,182,582,747 அதாவது மொத்த நிதி ஏற்பாட்டில் 53.3 சதவீதமே பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் செயற்திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்த ரூபா 1,914,787,223 ஆன நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. அவ்வாறு இருக்கையில் மீளாய்வாண்டின் இறுதியில் கிடைத்திருந்த ரூபா 1,321,843,434 ஆன வெளிநாட்டு மானியம் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | | ஒவ்வொரு ஆண்டிலும் செயற்படுத்தல் எதிர்பார்க்கப்படும் செயற்பாடுகளுக்காக பாதீட்டு நிதி ஏற்பாடு குறித்து செயற்திட்டம் எதிர்பார்க்கப்பட்டதன் பிரகாரம் செயற்படுத்தப்படாமையால் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடு சேமிக்கப்படலாம். இந் நிலைமையை தவிர்ப்பதற்கு / குறைப்பதற்கு நிதி ஏற்பாடு குறைவாக பயன்படுத்துதல் தொடர்பாக ஏற்றுக் கொள்ளக்கூடிய காரணங்கள் குறித்த அமைச்சின் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென அமைச்சின் செயலாளர் களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (iii) | மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் 17 வெளிநாட்டு மானிய செயற்திட்டங்களில் ரூபா 44,467,698 ஆன மீதி மற்றும் மீளாய்வாண்டில் 04 வெளிநாட்டு மானிய செயற்திட்டங்களுக்காக கிடைத்த ரூபா 14,448,912 தொகை குறித்த நோக்கங்களுக்கு பயன்படுத்தாமல் ஆண்டின் இறுதி வரை விளைவற்றுக் காணப்பட்டது. | கிடைத்த வெளிநாட்டு மானியம் குறித்த நோக்கங்களுக்கு பயன்படுத்த வேண்டும். | வெளிநாட்டு மானியங்களாக கிடைக்கும் பணத்தை ஆரம்பத்தில் விசேட வைப்புக் கணக்கொன்றில் வைக்கப்பட்டு ஒவ்வொரு ஆண்டிலும் செயற்படுத்தல் எதிர்பார்க்கப்படும் செயற்பாடு களுக்காக பாதீட்டு நிதி ஏற்பாடு குறித்து செயற்திட்டம் எதிர்பார்க்கப்பட்டதன் பிரகாரம் செயற்படுத்தப்படாமையால் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடு சேமிக்கப்படலாம். |
| (iv) | 28 வெளிநாட்டு மானிய செயற்திட்டங்களில் இருந்து கிடைத்த ரூபா 3,101,158,763 தொகை உரிய நோக்கங்களுக்கு பயன்படுத்தாமல் ஆண்டின் அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. இது முன்னைய ஆண்டின் அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்ட வெளிநாட்டு மானியமாக ரூபா 1,254,540 உடன் ஒப்பிட்ட போது நூற்றுக்கு 247,195 சதவீதமாக இருந்தது. | - மேற்படி - | ஏற்றுக் கொள்ளக் கூடிய காரணமொன்று காரணமாக எதிர்பார்க்கப்பட்ட செயற்திட்டம் மேலும் செயற்படுத்தாத சந்தர்ப்பங்களில் வெளிநாட்டு மானிய வகையில் அதற்கு கிடைத்துள்ள பணம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள வைப்புக் கணக்கிலிருந்து எடுக்கப்பட்டு அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டு வைப்புக் கணக்கு மூடப்படும் செயன்முறை இடம் பெறுகின்றது. எவ்வாறாயினும், குறித்த செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டதன் பின்னர் நாட்டிற்கு கிடைக்கும் குறுங்கால மற்றும் நீண்ட கால நலன்கள் கிடைக்காமல் இருந்த போது குறித்த மானியம் திரட்டு நிதிக்கு பெறுவனவொன்றாக |

| | | | |
|---|---|---|---|
| | | | கணக்கீடு செய்யப்படுகின்றது. |
| (v) | 08 வெளிநாட்டு மானிய செயற்திட்டங்களுக்காக ரூபா 22,919,139 தொகை எவ்வித பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் மீளாய்வாண்டில் குறித்த மானிய வழங்குநர்களுக்கு மீள அனுப்பி வைக்கப்பட்டிருந்தன. | - மேற்படி - | இவ் வெளிநாட்டு மானிய உடன்படிக்கைகளின் பிரகாரம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேற்று வதற்கு தவறிய அல்லது குறித்த காலப்பகுதியில் உரிய மானியத்தை செலவிட முடியாத சந்தர்ப்பங்களில் இலங்கை அரசிற்கு உரிய மானிய நிபந்தனைகளுடன் இணங்க முடியாத சந்தர்ப்பங்களில் அம் மானியங்கள் மீண்டும் வழங்குநர்களுக்கு மீள அனுப்பி வைக்கப்பட்டிருந்தன. |

## 2.2 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்காய்வு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் 06 செலவின விடயங்களிற்காக ரூபா 1,953,750 தொகையான ஒதுக்கப்பட்ட நிதிஏற்பாடுகளுக்கு ரூபா 119,949.1 ஆனு குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் அதிகரிக்கப்பட்டதுடன் அவ்வாறு மேலதிக மேலதிக நிதிஏற்பாட்டின் மூலம் அதிகரிக்கப்பட்ட நிதிஏற்பாட்டு அளவு, பாதிடப்பட்ட நிதிஏற்பாட்டிற்கு ஒப்பாக 01 சதவீதம் முதல் 43 சதவீதமாக இருந்தது. | நிதிப்பிரமாணம் 50 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். | இத் திணைக்களத்திற்கு தவிர்க்க முடியாத காரணங்கள் காரணமாகவும் நடைமுறைப்படுத்தல் நிலைமையின் பேரில் குறை நிரப்பு மதிப்பீடு மூலம் நிதி ஏற்பாட்டை அதிகரிக்க நேர்ந்தது. |
| (ஆ) | 04 செலவின விடயங்களுக்காக ரூபா 13,329,534,978 ஆன மிகை நிதி மேற்கொள்ளப்பட்டதால் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிஏற்பாடுகளில் 35 சதவீதம் முதல் 75 சதவீதம் வரையான அளவில் | வருடாந்த நிதிஏற்பாட்டின் மூலம் மிகை நிதிஏற்பாடு மேற்கொள்ளாதிருக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அவதானிப்பு சரியானதுடன் அவ்வாறு நிதி ஏற்பாடு சேமிப்பதற்கான காரணங்களாக மதிப்பீட்டின் பிரகாரம் வெளிநாட்டுப் பிரயாண செலவின (பயிற்சி மற்றும் செயலமர்வு அல்லாத) உருவாகாமை உரிய பிரகாரம் கடன் தொகை ஆண்டின் |

| | | |
|---|---|---|
| | நிதிஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. | கிடைக்கப் பெறாமை இச் செயற்திட்டம் 2018 ஆம் ஆண்டில் முடிவடைந்ததுடன் அச் செயற்திட்டத்திற்காக இலங்கை மத்திய வங்கியில் ஆரம்பிக்கப்பட்டிருந்த விசேட டொலர் கணக்கின் மீதி ரூபா 113,420,341.72 இற்கு மட்டுப்படுத்தப்பட்டமையால் அந்த எல்லை வரை மாத்திரம் செலவினம் மேற்கொள்ளப்பட்டமையால் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டமை மற்றும் தேசிய லொத்தர் சபை மூலம் வழங்கப்படும் பணம் உரிய நிறுவனங்களால் கோரப்படும் வேண்டுகோள் அடிப்படையாகக் கொண்டு விடுவிக்கப்பட்டதன் பின்னர் இந் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 எதிர்பார்க்கப்பட்ட விளைவு மட்டங்களை அடையாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்காய்வு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2019 பெப்ரவரி 28 ஆந் திகதி அமைச்சு மற்றும் திணைக்களங்களின் 35 கட்டு நிதி கணக்குகளில் மொத்த ரூபா 2,568,932,653 வரவு மீதிகள் தீர்வு செய்யப்படாமல் காணப்பட்டதுடன் அதில் ரூபா 498,820,040 தொகையான 04 கட்டு நிதி கணக்கு மீதிகளில் 1999 முதல் 2014 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இருந்து வருவதாக அவதானிக்கப்பட்டது. | கட்டு நிதி கணக்கு மீதிகள் தீர்வு செய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2019.01.01 இல் தீர்வு செய்யப்படாமல் காணப்பட்ட 197 கட்டுநிதி கணக்குகளில் 181 ஒப்பீடு செய்யப்பட்டு தற்போது தீர்வு செய்யப் பட்டுள்ளதுடன் 2019.04.10 இல் உள்ளவாறு மேலும் தீர்வு செய்யப்படாமல் காணப்படும். கட்டுநிதிக் கணக்குகளின் எண்ணிக்கை 16 ஆகும். அதில் இம் மீதி காணப்படுகின்றன. |

**(ஆ) கட்டுநிதி விடுவித்தல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்காய்வு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் போது மூலதன செலவினத்திற்காக கட்டு நிதி விடுவித்தல் 69 சதவீதம் மாத்திரமாக இருந்தது. ஆதலால் மூலதனச் செலவினத்திற்காக கட்டுநிதி விடுவித்தல் 2017 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2018 ஆம் ஆண்டின் போது வீழ்ச்சியடைந்திருந்தது. அதன் பிரகாரம் கட்டுநிதி விடுவித்தல் போதியளவில் இடம் பெறவில்லையென அவதானிக்கப்பட்டது. | கட்டுநிதி விடுவித்தல் முறைப்படுத்தப்பட வேண்டும். | அமைச்சு திணைக்களங்களுக்கு திறைசேரியால் மூலதன மற்றும் மீண்டெழும் செலவினங்களுக்காக கட்டுநிதி விடுவிக்கும் போது வருடாந்த கட்டுநிதி எல்லை தேசிய பாதீட்டு திணைக்களத்தினால் வழங்கப்படும் பரிந்துரைகள் உத்தியோக வங்கியில் காணப்படும் நாளாந்த வங்கி மீதிகள் / காசு மீதிகள் திரட்டிய நிதியின் கீழ் காணப்படும் நிதி நிலைமை கருத்திற் கொள்ள வழங்கப்பட வேண்டிய முன்னுரிமை தொடர்பாக கருத்திற் கொள்ளப்படும். |
| (ii) | அரசின் நிதிக்கூற்றுக்களில் அரச முதலீடாக காண்பிக்கப்பட்டுள்ள பெறுமதிகளை கருத்திற் கொள்ளும் போதும் மொத்த அரச முதலீட்டு பெறுமதி 2014 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2015 ஆம் ஆண்டின் போது 88 சதவீத அதிகரிப்பொன்றும் 2016 ஆம் ஆண்டின் போது 90 சதவீத வீழ்ச்சியொன்றும் அவதானிக்கப்பட்டது. அவ்வாறே 2017 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2018 ஆம் ஆண்டில் அது 32 சதவீதம் வரை வீழ்ச்சியடைந்திருந்ததாக அவதானிக்கப்பட்டதுடன் காரணமாக மேற்குறித்த விடயங்கள் மேலும் உறுதிப்படுத்தப்பட்டது. | கட்டுநிதி விடுவித்தல் முறைப்படுத்தப்பட வேண்டும். | 2017 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2018 ஆம் ஆண்டில் குடியரசின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அரச முதலீட்டுப் பெறுமதி குறைவடைவதற்காக திறைசேரியால் வழங்கப்பட்ட கட்டு நிதி குறைவடைந்தமை ஒரு காரணியாக அவதானிக்கிறேன். அதற்கு மேலதிகமாக ாயி நிறுவனங்களின் கட்டு நிதி கோரல் மற்றும் வருடாந்த கட்டுநிதி எல்லை தேசிய பாதீட்டு திணைக்களத்தின் பரிந்துரைகள், நிறுவனத்தில் காணப்படும் நாளாந்த காசு மீதிகள், திரட்டிய நிதியின் நிதி நிலைமை, முன்னுரிமை கருத்திற் கொள்ளல், எதிர்பார்க்கப்பட்ட வருமானம் கிடைக்காமை, அபிவிருத்தி செயற்திட்டங்களை செயற்படுத்தும் போது இடம் பெற்ற தாமதங்கள் மற்றும் ரூபா 58 மில்லியன் அளவிலான வெளிநாட்டு |

| | | |
|---|---|---|
| | | செயற்திட்டம் மூலம் இடம் பெறும் அரச முதலீடு 2018 ஆம் ஆண்டில் போதியளவு பாதீட்டு நிதி ஏற்பாடு கிடைக்காமையால் கணக்கீடு செய்வதற்கு முடியாமை போன்ற காரணங்கள் தாக்கமளித்திருந்தன. |

**(இ) வங்கி பிணைகள் மற்றும் சலுகை கடிதங்கள்**

| | | |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரை திறைசேரியால் 03 வணிக வங்கிகளுக்கு வழங்கப்பட்ட ரூபா 16,435.63 மில்லியன் பெறுமதியான 05 திறைசேரி பிணைகள், ஐக்கிய அமெரிக்க டொலர், மில்லியன் 1,800 (ரூபா 328,463.82 மில்லியன்) பெறுமதியான 03 பிணை முறிகள், ரூபா 8,591 மில்லியன் பெறுமதியான ஐக்கிய அமெரிக்க டொலர் மில்லியன் 75 (ரூபா 13,706.24 மில்லியன்) பெறுமதியான 06 சலுகை கடிதங்கள் காலாவதியாகி யிருந்ததுடன் அதற்காக தொடர்புடைய திணைக்களங்களால் போதியளவு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பிணைகள் மற்றும் சலுகை கடிதங்கள் வழங்கல் முறையான செயற்பாட்டின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டும். | காலாவதியான திறைசேரி முறிகளில் திகதியை நீடிப்பதற்கு தேவையான நடவடிக்கை நீடிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் ஏனைய பிணை முறிகளின் பொறுப்புக்களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு வழங்கப்பட்ட வசதிகள் வழங்கும் கடிதங்களின் பெற்றுக் கொள்ளப்பட்ட கடன் தொகையான காலரீதியான கடன் தொகையாக மாற்றப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

## 4. நிலைபேறான அபிவிருத்தி

### 4.1 நிலைபேறான நோக்கங்களை அடைந்து கொள்ளல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் அதன் கீழான குறிகாட்டிகளை பிரதானமாக கொண்டு நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் குறிகாட்டிகளை இனங்காணுதல் மற்றும் அடைந்து கொள்ளல் தொடர்பாக திணைக்களத்தின் கவனம் செலுத்தப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் 2018 ஆம் ஆண்டின் | செயல் நடவடிக்கைத் திட்டம் நிலைபேறான அபிவிருத்தி இலக்கை நோக்கி அடையக் கூடிய வகையில் தயாரிக்கப்பட வேண்டும். | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் அதன் கீழான குறிகாட்டிகளை பிரதானமாக கொண்டு நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளை அடைந்து கொள்ளல் தொடர்பாக தேசிய வரவு செலவு திட்ட சுற்றறிக்கை |

| | | |
|---|---|---|
| செயல் நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | | 02/2017 அடிப்படையில் இத்திணைக்களத்தின் சகல உத்தியோகத்தர்களையும் அறிவூட்டுவதற்காக உள்ளக பத்திரமொன்று விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன் உங்களது கணக்காய்வு அவதானிப்பின் அடிப்படையில் 2019 ஆம் ஆண்டின் வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்தை திருத்தம் செய்வதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

## 5 மனித வளங்கள் முகாமைத்துவம்

### 5.1 அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளவாறான பதவியணியினர்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரை சிரேஷ்ட மட்டப் பதவிகள் 04 உட்பட மொத்த வெற்றிடங்கள் எண்ணிக்கை 09 ஆக இருந்தது. | பதவியணியினர் திணைக்களத்தின் செயலாற்றலை முழு அளவில் முகாமைத்துவம் செய்ய வேண்டும். | இவ் வெற்றிடங்களுக்காக உத்தியோகத்தர்களை வழங்குமாறு கோரி நிதி அமைச்சின் மூலம் பொது நிர்வாக அமைச்சிற்கு விண்ணப்பித்துள்ளதுடன் PACIS மென்பொருள் ஊடாகவும் பொது நிர்வாக அமைச்சு தெரியப்படுத்தப்பட்டுள்ளதுஎவ்வாறாயினும், திணைக்கள செயலாற்றல் பாதிக்காத வகையில் தற்போது பதவியணியில் வெற்றிட பதவிகளில் கடமை பகிர்ந்தளித்தல் மூலம் கடமைகளை மேவுகை செய்வதற்கு நேர்ந்தது. |